அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு சித்திரை-வைகாசி ஜூன் 2017 முரசு 10 ஒலி 120



உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்.
ஆவி பாழ்போகாது அடங்கியே இருந்தால்
ஒவியமாகும் உடம்பு. - ஔவையார்

**ஆழ்நிலை தியான முகாம் & அருள் பூரண சித்தி யோகம் பயிற்ச்சி முகாம்களின் அழைப்பிதழ்கள் உள்ளே...**

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி – அருட்பெருஞ்ஜோதி

**நாள்: ஜுன் 24, 25 & 26** சனி, ஞாயிறு & திங்கள்
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
**பொள்ளாச்சி.**

## இந்த பயிற்சி முகாமில்...

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 80 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு:

**94434 89849, 97509 29074, 9865229035**

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை, திருவண்ணாமலை.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.


இவைகளில் எது ஒன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன்மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே. “*ஆழ்நிலை தியான முகாம்*”

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் ஜூன் 23-ஆம் தேதி வெள்ளி இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: T.ஷர்ட், ஷாட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். ஜூன் 26-ஆம் தேதி திங்கள் மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சி, உடுமலை பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பஸ் வசதி உள்ளது. பழனி வழியாக வருவோர் பழனி - ஆனைமலை பேருந்தில் ஏறி ரெட்டியார் மடம் ஸ்டாப்பிங்கில் இறங்கி அர்த்தநாரிப்பாளையம், பெருமாள்மலை அடிவாரம் என கேட்டு வரவும்.

பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: **16, 27, 58** (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: **28, 34** (கடைசி பஸ் இரவு 8:30க்கு)




# திருச்செவிக்கு விண்ணப்பம்

எம் புண்ணிய மூர்த்தியே! நீ, தன்னில் தானே எழுகின்ற ஒளி; என் உயிர்க்கண் நிலவும் உண்மை ஒளி; ஒப்பற்ற தலைமையான ஞான ஒளி; அம்பலத்தில் ஒளிர்கின்ற சிவஞானத் தீப ஒளி; என்னுடைய மனத்தின் உள்நின்று ஓங்குகின்ற நல்லொளி; ஞானம் விரிகின்ற நல்ல நாடக ஒளி; ஆன்மாவுக்கு நலம் செய்யும் அழகிய ஒளி; ஆனந்தம் நிறைந்த ஒளி.

தனக்கு உவமை இல்லாத உத்தமனே! என் தந்தையே! உன் பொன்னார் திருவடிகட்கு அன்பு செய்யாதவன் நான். ஆனாலும், ஒழிவு இல்லாமல் கலக்கத்திற்கு மட்டும் என் மனம் இடம் கொடுத்து வருகின்றது; ஏக்கத்திற்கு ஆளாகிறது. என்னுடைய இந்தப் பாதகச் செயலுக்கு உனது திருவுளம் இரங்கி ஆட்கொண்டு அருள்பாலிப்பது உனக்கு ஆகாத ஒன்றா? ஆண்டவனே.

அன்பு நிறைந்த உளத்தால் நினைக்கும் திருத்தொண்டர்தம் மனத்தில் ஊறும் இன்பமே! ஞானிகள் பெற்று மகிழும் சிவமாகிய பேரின்பக் கூத்தனே! உன் செம்மையாகிய திருவடியைச் சேரும் புகழ்மிக்க நன்மக்கள் எல்லாரும் எனைக் கண்டு பழிக்கும் புன்மையுடையவனாக உள்ளேன். ஆண்டவனே! என்னுடைய இந்த இழிதகவைப் போக்குவது உனக்கு அழகல்லவா! போக்கி ஆண்டுகொள்க!

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**ஞானயோ காந்த நடத்திரு வெளியெனும் 35**
**ஆனியில் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி 36**

*ஈண்டு யோகாந்தம் ஞானயோகாந்தம் எனக் கூறப்பட்டது. யோகத்தை அடுத்து ஞானம் இடம் பெறலான் யோகாந்தம் ஞானயோகாந்தம் எனப்பட்டது. ஆனியில் சிற்சபை - குற்றங் குறையற்ற சிற்சபை. ஹானி என்னும் வடசொல் இங்கு ஆனி என வந்தது.*

*ஞான யோகாந்த நடனத் திருவெளியாகிய சிற்சபையில் நடஞ்செய்தருளுகின்றார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். சிற்சபை நடனம் என்பது ஞானநடனம்.*

**யோகாந்தம்**

**தேடும் இயமம் நியமாதி சென்றுஅகன்று**
**ஊடும் சமாதியில் உற்றுப் பரசிவன்**
**பாடுறச் சீவன் பரம்ஆகப் பற்றுஅறக்**
**கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே.**

**– திருமந்திரம் 2376**

**விரிக்கும் இயம நியம ஆசனத்தின் விதி அறிந்து**
**சரிக்கும் அனிலனை நேரே நிறுத்திச் சமாதிபெற்றே**
**இருக்கும் பொழுதில் உபசாந்த நிட்கள நேயம்எய்திப்**
**பரிக்கும் தனியின்ப யோகாந்தம் எங்கள் பராபரையே.**

**– புவனை கலைஞானதீபம் 92**

*யோகாந்தமாவது அட்டாங்கயோகமார்க்க முடிபு. யோகத்தின் அங்கங்கள் எட்டு. அவை : 1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி என்பன.*

*எட்டு அங்கங்களை உடையதாதலின் யோகம், அட்டாங்க யோகம் எனப்படும். திருமந்திரத்தில் எட்டு அங்கங்களும் எட்டு அதிகாரங்களிற் கூறப்பட்டுள்ளன. பின்வரும் சூத்திரங்கள் இயமம் முதலான எட்டையும் கூறுவனவாம்.*

*பொய்கொலை களவே காமம் பொருணசை*
*இவ்வகை ஐந்தும் அடக்கியது* **இயமம்.** *1*
*பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்*
*கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை*
*பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு*
*நயனுடை மரபின்* **நியமம்** *ஐந்தே 2*

*நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல்என்*
*றொத்த நான்கின் ஒல்கா நிலைமையொ(டு)*
*இன்பம் பயக்குஞ் சமய முதலிய*
*அந்தமில் சிறப்பின் **ஆசன**மாகும். 3*

*உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்*
*தந்தம் இயக்கம் தடுப்பது **வளிநிலை.** 4*

*பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்*
*ஒருவழிப் படுப்பது **தொகைநிலை** யாமே. 5*

*மனத்தினை ஒருவழி நிறுப்பது **பொறைநிலை** 6*

*நிறுத்திய அம்மனம் நிலைதிரி யாமல்*
*குறித்த பொருளொடு கொளுத்தல் **நினை**வே. 7*

*ஆங்கனம் குறித்த அம்முதற் பொருளொடு*
*தான்பிற னாகாத் தகையது **சமாதி.** 8*

*பிராணாயாமத்தை வளிநிலை என்றும், பிரத்தியாகாரத்தைத் தொகைநிலை என்றும், தாரணையைப் பொறைநிலை என்றும், தியானத்தை நினைவு என்றும் , மேற்சூத்திரத்துட் கூறப்பட்டுள்ளதைக் காண்க.*

| | | |
|---|---|---|
| *இமயம், நியமம்* | – | *விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்* |
| *ஆசனம்* | – | *இருக்கை* |
| *பிராணாயாமம்* | – | *பிராணனைப் தன்வயப்படுத்தல்* |
| *பிரத்தியாகாரம்* | – | *புலன்களைப் பொருட்களின் மேற் செல்லவொட்டாது தடுத்தல்* |
| *தாரணை* | – | *மனத்தினை ஓரிடத்தில் நிறுத்துதல்; தரிக்கச் செய்தல்* |
| *தியானம்* | – | *நிலை திரியா நினைவு* |
| *சமாதி* | – | *உரையுணர்வு கடந்து நிற்றல்* |

*இவற்றுள் முடிவான சமாதியில் எட்டும் அடங்கும். தியானத்தில் ஏழும், தாரணையில் ஆறும், பிரத்தியாகாரத்தில் ஐந்தும், பிராணாயாமத்தில் நான்கும், ஆசனத்தில் மூன்றும், நியமத்தில் இரண்டும் அடங்கும். இவ்வெட்டு அங்கங்களையுடைய யோகத்தின் முடிபு யோகாந்தம்.*

**ஔவியம் ஆதிஓர் ஆறுந் தவிர்த்தபேர் 25**

**அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி 26**

| | | |
|---|---|---|
| *ஔவியம்* | – | *பொறாமை* |
| *ஔவியம் ஆதி ஓர் ஆறும்* | – | *பொறாமை முதலான ஆறு தீக்குணங்களும்* |

| | | |
|---|---|---|
| தவிர்த்த பேர் | – | தவிர்த்தவர்கள் |
| அவ்வியல் | – | அவ்வாறு தவிர்ந்த இயல்பினால் |
| வழுத்தும் | – | வழுத்துகின்ற ; தொழுகின்ற |
| அருட்பெருஞ்ஜோதி | – | அருட்பெருங்ஜோதியே |

**ஔ**வியம், உட்பகை ஆறனுள் ஒன்று. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறும் மக்களுக்குள்ள உட்பகை என்று கூறப்பெறும். உட்பகை ஆறு என்று தொகுத்துக் கூறுவது வழக்கு. காமாதி ஆறு என்பர். காமம் முதலான ஆறென்பது பொருள்.

| | | |
|---|---|---|
| காமம் | – | அவா, ஆசை |
| குரோதம் | – | கோபம், வெறுப்பு |
| உலோபம் | – | கையிறுக்கம், கருமித்தனம் |
| மோகம் | – | பேரவா, பேராசை |
| மதம் | – | செருக்கு, ஆணவம் |
| மாச்சரியம் | – | செற்றம், பொறாமை |

வெளிப்பகையைவிட உட்பகை கொடியது. வெளிப்பகை வெளிப்படையாகத் தெரியும். உட்பகை வெளிப்படையாகத் தெரியாது. உள்ளுக்குள்ளேயே இருந்து கெடுக்கும். வெளிப்பகை பகிரங்க விரோதி என்றால், உட்பகை அந்தரங்க விரோதி.

காமத்தில் மோகத்தையும், குரோதத்தில் மாச்சரியத்தையும், மதத்தில் உலோபத்தையும் அடக்கி, காமம் வெகுளி மயக்கம் என உட்பகையை மூன்றாகக் கூறுவதும் உண்டு.

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய் குறள் 360**

என்பது திருக்குறள் மெய்யுணர்தல் அதிகாரத்துக் குறட்பா. நோய் என்பது ஈண்டுப் பிறவிநோய். இவைமூன்றன் **நாமம்** கெட என்றதை ஊன்றிக் காணவேண்டும். மூன்றின் பேருங்கூடத் தலைகாட்டக் கூடாது என்பது பொருள். நாமம் கெட – பெயரும் இல்லாதபடி ஒழிய. காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூன்றுக்கும் கூறிய இக்குறள், உட்பகை ஆறுக்கும் (அறுபகைக்கும்) பொருந்தும்.

ஔவியம் – பொறாமை, அழுக்காறு. 133 (நூற்றுமுப்பத்து மூன்று) அதிகாரங்கள் என வகுத்துக்கொண்டு திருக்குறளைச் செய்த வள்ளுவப் பெருமான் அழுக்காறுக்கு எனத் தனி ஒரு அதிகாரமே வைத்தார். அறத்துப்பால், அதிகாரம் 17, அழுக்காறாமை. அழுக்காற்றை "அழுக்காறு என ஒரு **பாவி**" என்றே சாடினார். அழுக்காறுதான் ஔவியம் என்பது. "**அவ்விய** நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்"

என்ற குறளாற் பெறப்படும். அவ்விய நெஞ்சம் – பொறாமை உள்ளம், அழுக்காறு நிறைந்த நெஞ்சம். அவ்வியம் – ஔவியம் (ஒருவகைப் போலி)

அறங்கூற வந்த ஔவைப் பிராட்டியாரும் "ஔவியம் பேசேல்" என்று ஆத்திசூடியிற் கூறினார்.

அருட்பெருஞ்ஜோதியை வழுத்துவதற்கு ஔவியமாதி ஓராறையும் தவிர்க்க வேண்டும். ஔவிய முதலான ஆறையும் தவிர்த்தவரே அருட்பெருஞ்ஜோதியை வழுத்தி அருள் பெறுவர். "ஔவியமாதி ஓர் ஆறும் தவிர்த்தபேர் அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி" என்றதன் பொருள் இதுவே.

# திருப்பள்ளி எழுச்சி – ஓர் ஆய்வு

**– தவத்திரு ஊரன் அடிகளார், வடலூர்**

**தொ**ல்காப்பிய காலத்திலிருந்தே, சங்க காலத்திலிருந்தே திருப்பள்ளியெழுச்சி இருக்கிறது. ஆனால் அப்போது அதற்குத் திருப்பள்ளியெழுச்சி என்ற பெயர் இல்லை. 'துயிலெடை நிலை' என்பதே பெயராக இருந்தது. அரண்மனைகளில் வைகறையில் பள்ளியெழுச்சி பாடி அரசனைத் துயிலுணர்த்தவென்றே பாணர்கள் இருந்தனர். அரசன் அரண்மனைக்கு வெளியே போர்க்களத்தில் பாசறையில் இருந்த போதும் அவனைப் பள்ளியுணர்த்திப் பாடுவதுண்டு.

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**

என்பது தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை இயல் முப்பத்தாறாம் சூத்திரம். அரசனைத் துயிலெழுப்புவதற்குச் சூதரைத் தவிர மாகதர், வேதாளிகர், வந்திகர் என்போரும் இருந்தனரென்பது மேற் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் வரையும் உரையால் தெரிகிறது.

இவ்வாறு தொல்காப்பிய காலத்தும், சங்க காலத்தும் அரசரைப் பள்ளியுணர்த்தும் துயிலெடை நிலையைப் பிற்காலத்தில் ஞானிகள் இறைவனைப் பள்ளியுணர்த்தும் திருப்பள்ளியெழுச்சியாக மாற்றினர். பக்தி உலகில் முதன் முதலில் திருப்பள்ளியெழுச்சி பாடியவர் மாணிக்கவாசகர். பின்னர் தொண்டரப் பொடியாழ்வாரும் மாணிக்கவாசகரைப் பின்பற்றித் திருவரங்கத் தம்மானைப் பள்ளியுணர்த்தித் திருப்பள்ளியெழுச்சி பாடினார்.

திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மரபு மாணிக்கவாசகரால் தோற்றுவிக்கப்பெற்றது. திருவாசகத்தில் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் மிகுபுகழ் பெற்றவை. வைணவ உலகில் ஆண்டாள் திருப்பாவை பாடினார். தொண்டரடிப்பொடியாழ்வார்

*திருப்பள்ளியெழுச்சி பாடினார். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மரபு சைவ வைணவத்தைக் கடந்து சமணத்திற்கும் சென்றது. சமணரும் திருவெம்பாவை பாடினர். சமணத் திருவெம்பாவை இன்று அரிதாகவேனும் காணக் கிடைக்கிறது. தமிழில் இன்று வழங்கும் திருப்பள்ளி எழுச்சிகள் பின்வருமாறு.*

**1. திருவாசகம் – திருப்பள்ளியெழுச்சி – மாணிக்கவாசகர்**

**2. திவ்வியப்பிரபந்தம் – திருப்பள்ளியெழுச்சி – தொண்டரடிப்பொடி ஆழ்வார்.**

**3. தத்துவராய சுவாமிகள் பாடுதுறையில் ஐந்து திருப்பள்ளியெழுச்சிகள்.**

**4. திருப்போரூர்ச் சந்நிதிமுறையில் உள்ள திருப்பள்ளியெழுச்சி – திருபோரூர் சிதம்பர சுவாமிகள்.**

**5. திருஅருட்பா – திருப்பள்ளியெழுச்சி – வள்ளலார்.**

*மாணிக்கவாசகர் தொடங்கி வைத்த திருப்பள்ளியெழுச்சி மரபு தொடர்கிறது.*

*திருவாசகத் திருப்பள்ளியெழுச்சியின் திருவுள்ளக்கிடை “திரோதான சுத்தி”. திரோதானம் – மறைப்பு. சுத்தி – நீக்கம்.*

*“நீறு அணிந்தார் அகத்து இருளும்; நிறை கங்குல் புறத்து இருளும் மாற வரும் திருப்பள்ளி எழுச்சி” என்று சேக்கிழார் பாடுகிறார். (பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம் 68)*

*புறஇருள் நீங்கும் நேரத்தில் துயில் எழுகிறோம். அப்போது அக இருளும் நீங்கவேண்டும். இறைவனைப் பள்ளி உணர்த்தி ‘உன் பணியைக் கட்டளையிடு’, ‘எது எமைப் பணிகொளுமாறு’ என விண்ணப்பிக்க வேண்டும். பழைய திருப்பெருந்துறைப் புராணத்தில் திருவாசகச் சிறப்புரைத்தவிடத்தில் திருப்பள்ளியெழுச்சியாவது ஆண்டவனிடத்தில் சென்று பணிவிடை என்னவென்று கேட்டு ஆர்வமுடன் செய்வதெனச் சொல்லப்பட்டுள்ளது.*

**“ஏர்மருவும் பள்ளி எழுச்சி பணிவிடை கேட்டு**
**ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்பு செய்யும் இயல்பே”** *என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.*

*இத்தகைய சிறந்த திருப்பள்ளியெழுச்சியை நாள்தோறும் அதிகாலையில் ஓதுதல் சைவ மரபு. மார்கழித் திருவாதிரை விழாவில் திருவாதிரையை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களிலும், ஏனைய திருமுறைப் பாசுரங்கள் ஓதுவதை நிறுத்தித் திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சியை மட்டும் ஓதுவதே வழிபாட்டு மரபாக இருந்து வருகிறது. இவ்வைகறைப் பாடல்களுக்கு அவ்வளவு சிறப்பு.*

வைணவ உலகில் தினந்தோறும் பாடும் நித்தியானுசந்தானப் பாசுரங்களில் இது முதலிடம் பெறுகிறது. நித்தியானுசந்தானம் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டில் தொடங்கும். திருப்பல்லாண்டுக்கு அடுத்த இடம் திருப்பள்ளியெழுச்சிக்கு உரியது. "அடியார்க்கு நாளோலக்கம் அருள அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாய்" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியது திவ்வியப் பிரபந்தத் திருப்பள்ளி எழுச்சி.

திருவாசகத் திருப்பள்ளி எழுச்சியும், திவ்வியப்பிரபந்தத் திருப்பள்ளி எழுச்சியும் ஒன்றோடொன்று போட்டியிடுவது போன்று சிறப்பாக அமைந்துள்ளன.

திருப்பள்ளி எழுச்சியின் உட்கிடை 'செய்பணி வினவல்' என்பது திருவாசகத் திருப்பள்ளி எழுச்சியால் அறியப்பெறும். 'நாளோலக்கம் அருளவேண்டுதல்' என்பது திவ்வியப்பிரபந்தத் திருப்பள்ளி எழுச்சியால் பெறப்படும். செய்பணி வினவல், நாளோலக்கம் அருள வேண்டுதல் ஆகிய இரண்டையுமே வள்ளல் பெருமான் தமது திருப்பள்ளி எழுச்சியில் அமைத்துள்ளார்.

வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நேரே விளித்து இத்திருப்பள்ளி எழுச்சிப் பதிகம் பத்துப் பாடல்களையும் பாடுகின்றார். "செய்பணி எல்லாம் சொல்லுதல் வேண்டும்" என முதல் பாடலிலேயே வேண்டுகிறார். ஒன்பதாவது பத்தாவது பாசுரங்களில் திருச்சபையை அலங்கரிக்கின்றோம் அதில் எழுந்தருள வேண்டுகிறோம் என்பது நாளோலக்கம் எழுந்தருள் என்பதாகும்.

இறைவனைத் துயில் எழுப்புவதாகத் திருப்பள்ளி எழுச்சி பாடுவது உபசாரமே. அஞ்ஞான உறக்கத்திலிருக்கும் நம்மை இறைவன் எழுப்பி அருள் பாலிக்கிறான் என்பதே உண்மை. இவ்வுண்மையை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் வியாக்கியான கர்த்தாவாகிய பெரியவாச்சான் பிள்ளை தமது வியாக்கியானத்திற் கூறுகின்றார். இதனை வள்ளல் பெருமனான் தமது திருப்பள்ளி எழுச்சி 7வது பாடலில்

**சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்**
**சிவசிவ போற்றியென்று உவகை கொள்கின்றார்**
**நினைப்பள்ளி உண்ணத் தெள்ளாரமுதளிக்கும்**
**நேரமிந் நேரமென்று ஆரியர் புகன்றார்**
**முனைப்பள்ளி பயிற்றாது என்றனைக் கல்வி பயிற்றி**
**முழுதுணர்வித்து உடல் பழுதெலாம் தவிர்த்தே**

**எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்ஜோதி**

**என்னப்பனே பள்ளி எழுந்தருள் வாயே** *எனப் பாடியுள்ளார். இங்கு "எனைப் பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்ஜோதி" என்ற வரி கருததற்குரியது. திருவாசகத் திருப்பள்ளி எழுச்சியிலும், திவ்வியப் பிரபந்தத் திருப்பள்ளி எழுச்சியிலும் வெளிப்படையாகக் கூறப்படாத இவ்வுண்மையைத் திருவருட்பாத் திருப்பள்ளி எழுச்சியில் வள்ளல் பெருமான் வெளிப்படையாகக் கூறியருளியுள்ளார்.*

*திருஅருட்பா, ஆறாம் திருமுறை, மெய்இன்பப் பேறு பதினோறு பாடல்களிலும் "எனைப் பள்ளி எழுப்பி மெய்யின்பம் தந்தீரே" என்பதே மகுடமாக உள்ளது. (பாடல் தோறும் ஈற்றுத் தொடராக உள்ளது.)*

**1. செய்பணி வினவல், 2. நாளோலக்கம் எழுந்தருள வேண்டுதல், 3. உண்மையில் இறைவன் நம்மை எழுப்ப, நாம் உபசாரமாக இறைவனை எழுப்புதல்** *ஆகிய திருப்பள்ளி எழுச்சி உட்கிடை மூன்றும் வள்ளல் பெருமான் பாடிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருப்பள்ளி எழுச்சியுள் அமைந்துள்ள அருமை கண்டு இன்புறற்பாலது..*

*திருச்சிற்றம்பலம்*

# உள்ளது உரைத்தல்

## தசகாரியம் - *திருஅருட்பா உரைநடைப்பகுதி*

| | | |
|---|---|---|
| **தத்துவரூபம்** | - | **பூதமுதல் நாததத்துவம் வரை உள்ளவெல்லாம் நாமல்லவென்று அறியும் போதம் (அறிவு).** |
| **தத்துவதரிசனம்** | - | **தத்துவம் சடம், சடம் நம்மையறியாது, நாம் சித்துருவென்று அறியும் போதம் (அறிவு).** |
| **தத்துவசுத்தி** | - | **சித்துருவினை மறைத்தது இஃதென்றோர்தல்.** |
| **ஆன்மரூபம்** | - | **ஆணவமகன்று ஆசாரியனருளால் தன்னை அடைதல்.** |
| **ஆன்மதரிசனம்** | - | **நாம் சித்துருவன் என்று மகிழ்தல்.** |
| **ஆன்மசுத்தி** | - | **செயலற்று ஈசனருள் அடைதல்.** |
| **சிவரூபம்** | - | **சிவமாகத் தரிசித்தல்.** |
| **சிவதரிசனம்** | - | **உயிர் ஆனந்திப்பது.** |
| **சிவயோகம்** | - | **எல்லாந்தானாக யோகு செய்தல்.** |
| **சிவபோகம்** | - | **சிவத்தோடு அத்துவிதமாகி நிற்றல்.** |

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

eXS Lending Library

எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

Books for All Ages

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

HABITUAL READER

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available


AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755



# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

பாராயணப் பகுதி



அன்னையினும் பெரிதினியக் கருணை ஊட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையில் அகப்பட இயற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்
என்னை உளம் கொள்ளுதியோ கொள்கிலாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேனே. 1

தாயாகினும் சற்று நேரம் தரிப்பள் நம்தந்தையை நாம்
வாயார வாழ்த்தினும் வையினும் தன்னிடை வந்து இதுநீ
ஈயாய் எனில் அருள்வான் என்றுஉனை அடுத்தேன் உமையாள்
நேயா மனம் இரங்காயா என் எண்ணம் நெறிப்படவே. 2

தீராத துயர்க்கடலில் அழுந்திநாளும்
தியங்கி அழுதேங்கும் இந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயல்என்னே எந்தாய் எந்தாய்
பாவிஎன விட்டனையோ பன்னாளாக
ஏராய அருள்தருவாய் என்றே ஏமாந்து
இருந்தேனே என்செய்கேன் யாரும் இல்லேன்
சீராரும் தணிகைவரை அமுதே ஆதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்திலேனே. 3

தூய நெஞ்சினேன் அன்று நின்கருணைச்
சுகம் விழைந்திலேன் எனினும் பொய்உலக
மாயம் வேண்டிலேன் வந்துநிற்கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப்பறியேன்
ஈய வாய்த்தநல் தருணம் ஈது அருள்க
எந்தை நின்மலர் இணையடி அல்லால்
தாயம் ஒன்றிலேன் தனிவடல் அரசே
சத்தியச் சபைத் தனிப்பெரும் பதியே. 4

# அன்பு அருள் ஆனந்தம்

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளை பரிபூரணமாகப் பெற்ற நம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் பிறவிப் பெரும் பிணியால் அவதியுறும் நம் போன்றோர் அவ்வத்தைகளினின்று நீங்கி நித்திய பரிபூரண ஆனந்த வாழ்வடைதல் பொருட்டாக நல் சுத்த சன்மார்க்க மென்னும் பெருநெறியை காட்டியருளினார். அந்நெறியின் மகத்துவத்தையே நாம் இங்கே காணவிருக்கிறோம்.

ஒரு ஆசிரியர் தம் மாணவர்களில் ஒவ்வொருவராய் எழுப்பி "மகாத்மா காந்தியின் கொள்கை என்ன?" என்று வினா எழுப்பினார். அவர்களில் ஒருவருக்கும் பதில் தெரியவில்லை. எனவே ஒவ்வொருவரையும் பிரம்பால் அடித்துவிட்டு "இதுகூடவா தெரியவில்லை. இப்போது நான் சொல்கிறேன் எல்லோரும் திரும்பச் சொல்லுங்கள். **அஹிம்சை**" என்று சொன்னவுடன் மாணவர்களும் வலியால் தவிக்கும் தங்கள் கைகளைப் பிடித்தவாரே "அஹிம்சை" என்றனர்.

இக்கதை நமக்கு கூறவரும் கருத்துதான் என்ன? இதுநாள் வரை அன்பே வடிவான பரம்பொருளை பூஜிக்க, துதிக்க சமய மதவாதிகளால் உருவாக்கப்பட்ட மார்க்கங்களெல்லாம் மக்களிடையே பிரிவினைகளையும், குழப்பங்களையும் உண்டாக்கி அநேக உயிர் சேதங்களையும் ஏற்படுத்தியது. மேலும், நடைமுறை வாழ்விலும் மனிதர்களிடையே சாதிப் பிரிவினைகளை உண்டாக்கி உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதங்களை தோற்றுவித்து மனித சமுதாயத்தை பிளவுறச் செய்தது.

இந்நிலையில்தான் நம் வள்ளல் பெருமான் தோன்றி அன்பின் மூலமாக அன்பே வடிவான இறைவனின் திருவருளை அனைவரும் பெற சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியை வகுத்தருளினார். இஃது நம் வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதையும் ஆன்மீகத்தோடு இயைந்த வாழ்வாக அமைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது. இதைப் புரிந்து கொள்ளும் வகையில் திருமூலரின் திருமந்திரம் ஒன்றை நாம் இங்கே காண்போம்.

**படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈவர்**
**நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈவீர்**
**நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்**
**படமாடக் கோயில் பரமற்கு அது ஆமே.**

*இங்கே சித்தர் திருமூலர் இரண்டு கோயில்களைக் குறிப்பிடுகின்றார். ஒன்று நம்மால் உருவாக்கப்பட்ட ஓவியம் போல விளங்கும் மாடக் கோயில். மற்றொன்று இறைவனால் உருவாக்கப்பட்ட நடமாடும் கோயில்களாகிய ஜீவ தேகங்கள்.*

*நாமே இறைவனுக்காக ஒரு கோயிலை உருவாக்கி, அங்கு இறைவன் இருப்பதாக பாவித்து அவருக்கு உணவு படைக்கிறோம். ஆனால் உண்மையில் இறைவன் குடியிருக்கும் கோயில் ஜீவதேகங்களே. இத்தேகங்களுக்குள் உண்மையிலேயே இறைவன் குடிகொண்டிருக்கிறார். இவர்களுக்கு உணவு படைப்பதனால் அஃது இறைவனுக்கு சென்று சேரும் என திருமூலர் அருளியுள்ளார்.*

*இதனை அடிப்படையாகக் கொண்டே* **ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு** *என்றார் நம் வள்ளல் பெருமானார். இந்த ஜீவ தேகங்கள் இறைவன் வாழும் ஆலயம் என்பது எப்படியென சற்று விரிவாகப் பார்ப்போம்.*

*“மனித தேகத்தில் கோசத்திற்கு இரண்டரை அங்குலத்திற்கு மேல் நாற்சதுரமான ஒரு பை உண்டு. அதில் 16 வயதளவும் உண்டாகும் இந்திரியம் ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான்* **மானசதடாகம்** *என்று சொல்லுகின்றது. 16 வயதிற்கு மேல் சேரும் இந்திரியம் உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகிறது. அப்படியாகச் சேர்ந்து கொண்டு வரும் இந்திரியம் பொன் வர்ணமாக இருக்கும். அதை* **தாமரைப்பூ** *என்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றில் ஒரு பங்காக வெகு நேர்மையாக இருக்கும். அதன் வண்ணம் பொன்மயமாய் இருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம்* **பிரமன்** *என்று சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலம் அவருக்குச் சகலகாலம் என்றும் அடங்கும் காலம் கேவலகாலம் என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலத்தில் செயற்கையானால் கருத்தரிக்கும். அது* **சிருஷ்டி** *என்று சொல்லப்படும்” இஃது நம் பெருமானார் உரைநடைப் பகுதியில் ‘பிண்ட அனுபவ இலக்கணம்’ என்ற தலைப்பின்கீழ் அருளியுள்ளது. இவ்வண்ணம் பார்த்தால் பிரம்மன் என்று சொல்லப்படும் சிருஷ்டிக்குரிய கர்த்தா நம் தேகத்தில் மூலாதாரத்தில் உள்ளார் என்பது தெளிவாக விளங்குகின்றது.*

*மேலும், நம் பெருமானார் அருளியுள்ளதைக் காண்போம். “அதில் ஆவி உண்டாகத் தொப்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி*

இருக்கின்றது. அது **மூலாக்கினி** என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால் **விஷ்ணு தொப்புளில்** இருப்பதாக சொல்லப்படுகின்றது.

அதன் மேல் இரண்டரை அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால் போன்ற ஜலமயமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கின்றது. அதை **க்ஷீராப்தி [பாற்கடல்]** என்று சொல்லுகின்றது. அந்தப் பையிலிருக்கும் பால் போன்ற ஜலத்தின் மேல் ஆலிலை வடிவுடைய வயிற்றின் உட்பாகம் படிவதனால் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை **ஆலிலை** என்று சொல்லுகின்றது. அந்த ஆடையின் மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி இருக்கின்றது. அதை **சேஷன்** என்று சொல்லுகின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்பு போன்ற பச்சை மேனியாய் ஒரு சத்தியுண்டு. அதை **விஷ்ணு** என்றும் அச்சத்தியில் முன் பின் நடு என்னும் இடத்தில் அதன் காரணச் சத்து பொன் வண்ணமாயும், ருத்திர வண்ணமாயும், குங்கும வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் **சீதேவி, பூதேவி, நீளாதேவி** எனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தியிருப்பதால் விஷ்ணு மார்பில் லஷ்மியை வைத்தார் என்பது.

குண்டலி வட்டமான நாடி மத்தியில் உள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாகி இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும், ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து மேலே செல்லும்போது பசுமை வண்ணமாயும், கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாயும் செல்லுகின்றது. மேலே செல்லுவதினால் ஜீவர்களுக்கு ஜிவிப்பும், அதின் சாரம் கெட்டு கீழே செல்வதினால் ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது. மேலே செல்வதில் ஜீவிப்புண்டாகுவதால் **காத்தல்** தொழிலை உணர்த்துகின்றது. மேலும், மேலே செல்லுகின்றதை **விஷ்ணு வைகுந்தம் போகின்றார்** என்றும் கீழே செல்லுகின்றபோது **க்ஷீராப்தியில் [பாற்கடலில் பள்ளி கொண்டு]** இருக்கின்றார் என்றும் சொல்லுகின்றது. கீழே செல்லும் நாடி முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாகி பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும் இந்தச் சதுரமான பையின் வலப்பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது.

*அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக் கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்துவிடுகின்றது. கிரகித்த சத்தை முன் சொன்ன க்ஷீராப்திப் பையில் சேர்க்கின்றது. இதை* **வடவாக்கினி** *என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்திப் பிரளயம் வாராது காத்துக் கொண்டிருக்கின்றது. இந்த உதராக்கினி குறைவுபட்டு க்ஷீராப்தியில் ஜலத்தின் தரம் கெடுமானால் நோயுண்டு"*

*இதுவரை இந்த தேகத்தில் பிரமன் எங்கிருக்கிறார்? அவர் சிருஷ்டி கர்த்தா என்பது எப்படி எனவும், விஷ்ணு எங்கிருக்கிறார்? அவர் காத்தல் தொழிலைச் செய்கின்றார் என்பது எப்படியெனவும், பாற்கடலில் பள்ளி கொள்ளுதல் என்றால் என்னவென்பதையும், விஷ்ணு மார்பில் லஷ்மியை வைத்தாரென்பது என்ன என்பதையும் கண்டோம். இனி மேலும் காண்போம்.*

*"இந்த சதுரமான பையாகிய ஸ்தானத்திற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூப்போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாயிருக்கும். இதைக்* **கைலாயம்** *என்று சொல்லுகின்றது. இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதினாயிரம் கோடி பங்கில் ஒரு பங்காக வெகு நேர்மையாய் அக்கினி மயமாய் ஒரு ஆவியிருக்கும். இதற்குக்* **காரணாக்கினி** *என்று பெயர். இவ்வக்கினியைக்* **காலசந்திர ருத்திரமூர்த்தி** *என்பர். இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப்பூப்போல் ஒரு பையுண்டு. அந்தப் பை பசுமை வண்ணமாயிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மை பைக்கும் ஒரு நாடி உண்டு. அதன் மூலமாய் காரணாக்கினி அதிகப்படுத்தாமலும் குறைவு படுத்தாமலும் சமப்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்தி பைக்கும் ஒரு நாடி உண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணம் கொடுத்து நிலையில் வைக்கும். இதனால்* **ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச்** *சொல்லுகின்றது.*

*இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும், பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் ருத்திரனைச்* **சம்ஹார** *கர்த்தாவென்று சொல்லுவது.*

*இந்த அக்கினிப் பையில் குண்டலிவட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூலம் முதல் பிரமரந்திரம் வரையில் இடம், வலம், நடு என்று கத்திரிமாறலாய்ப் பிராண அபானனுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந்நரம்புகளுக்குச்* **சோம, சூரிய, அக்கினி** *என்று பெயர்.*

இஃதன்றி இக்குண்டலிவட்ட நரம்பின் அடியில் இரண்டு நரம்பு வலத்தில் அஞ்சு கவருடைய தலையாயும், இடத்தில் ஆறு கவருடைய தலையாயும் நிற்கின்றன. வலத்திலுள்ளது **கணபதி** என்றும், இடத்திலுள்ளது **சுப்பிரமணியர்** என்றும் பெயர் சொல்லுவது. மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்கு கீழ் நோக்கி கிருஷ்ண வண்ணமாய் இருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்குக் கணபதியென்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம், வலம் இரண்டிலும் **சித்தி தத்துவம், புத்தி தத்துவம்** உண்டு.

இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்கு கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்றுண்டு. இதற்கு **மயூரம்** என்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் நாடியும் அக்கிரமமின்றி நிலைபெறுகின்ற படியால் இதற்குச் **சேனாதிபதி** என்றும் பெயர். மேலும் வலது புறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும், இடது புறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் வித்தியாசம் இருப்பதால் இவர்களை சகோதரர்களாகச் சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்குமேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் மகேசுவரனும், அதற்குமேல் இரண்டரை அங்குல அண்ணாக்கில் சதாசிவமும், அதற்குமேல் இரண்டரை அங்குல உயரத்தில் புருவமத்தியில் விந்துவும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் நாதமும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் பரவிந்துவும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் பரநாதமும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் திக்கிராந்தமும், அதிக்கிராந்தமும், துவாதசாந்தம் முதலானவைகளும், அதீதத்தில் சுத்தசிவமும் உள.

மேலும், பிரமஸ்தானம் தொடங்கி சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் – இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும், அதற்கு மேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியில் பருத்து வரவர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்ம காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்கு **சிவா காரண பூரண ஸ்தம்பம்** என்று பெயர்.”

ஆக கைலாயம் என்பது என்ன? ருத்திரன் எங்கிருக்கிறார்? மகேஸ்வரன் எங்கிருக்கிறார்? சதாசிவன் எங்கிருக்கிறார்? கணபதி, சித்தி, புத்தி, சுப்பிரமணியர், மயூரம் என்பவற்றின் தத்துவார்த்தம் என்ன? என்பது போன்ற உண்மைகளையும் அறிந்தோம். இவை யாவும் நம் வள்ளல் பெருமானார் தன் அனுபவத்தில் கண்ட நிதர்சனமான உண்மை.

*இனி முன்சொன்ன திருமூலர் திருமந்திரத்தை நினைவு கூர்ந்தால் இச்சீவ தேகமே இறைவன் வாழும் கோயில் என்பது விளங்கும். இச்சீவ தேகங்களுக்கு உணவு கொடுப்பதால் பஞ்ச கர்த்தாக்களுக்கும், எல்லாத் தெய்வங்களுக்கும் உணவு கொடுப்பதற்கு சமம் என்று அவர் கூறியது உண்மைதானே.*

*மேலும் நம் வள்ளல் பெருமானாரும் உரைநடைப் பகுதியில் ஞானசபையில் நடராஜரும் என்ற தலைப்பில் "ஞானசபை என்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகின்றது" என அருளியுள்ளார்.*

*எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணி அவ்வுயிர்களுக்கு இரங்கி இதம் புரிவதே உண்மையான கடவுள் வழிபாடு என்பது தெளிவாகிறது. இதனையே சித்தர் திருமூலரும் அருளியுள்ளார். அதனால்தான் நம் பெருமானார்* **ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு** *என்றார்.*

*ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது என்ன? ஜீவர்களுக்கு பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும், கேட்டபோதாயினும், இவ்வாறு உண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகும். இந்த ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தலே ஜீவகாருண்ய ஒழுக்கமாகும். இதில் பசி தவிர்த்தலும், கொலை தவிர்த்தலும் மிக உயர்ந்த ஜீவகாருண்யம். இந்த ஜீவகாருண்யத்தால் விளையும் பயன் என்ன என்பதை விளக்கும் திருஅருட்பா பாடல் ஒன்றை இங்கே காண்போம்.*

**காலையிலே என்றனக்கே கிடைத்தபெரும் பொருளே**
**களிப்பேஎன் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே**
**மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்**
**மேவுகின்ற பெரும்பயனாம் விளைவையெலாம் தருமச்**
**சாலையிலே ஒருபகலில் தந்ததனிப் பதியே**
**சமரசசன்மார்க்க சங்கத் தலையமர்ந்த நிதியே**
**மாலையிலே சிறந்தமொழி மாலை அணிந்தாடும்**
**மாநடத்தென் அரசே என்மாலையும் ஏற்றருளே.**

*இளம் பிராயத்திலேயே நம் பெருமானை ஆண்ட அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், நம் பெருமானாருக்கு இருவேறு பிறவிகளிலும் ஒருமையோடு தவம் இயற்றினால் எத்தனைப் பெரிய லாபம்*

*கிடைக்குமோ, பலன் கிடைக்குமோ அத்தனையும் தருமசாலையில் ஒரே பகலில் தந்து அருளியதாகப் இத்திருஅருட்பாவில் பாடிக் களிக்கின்றார்.*

*எப்படியெனில், நாம் ஒவ்வொருவரும் இன்பமாக வாழவே விரும்புகின்றோம். இந்த இன்பத்திற்காகவே நாம் எல்லாவற்றையும் செய்கிறோம். ஆனால் இக்காரியங்களின் விளைவாக நாம் பெறும் இன்பம் சிற்றின்பமே. இது நிலையற்றது. இதனை அறியாது நாம் இச்சிற்றின்பச் சுகத்திலேயே காலத்தைக் கழித்து வீண் போகிறோம். எனவே நித்தியமான இன்பத்தை, பரிபூரண இன்பத்தை ஜீவர்களாகிய நாம் அனைவரும் அடைவதற்காகவே நம் மகான்களாலும் ஞானிகளாலும் பக்தி மார்க்கமும், யோக மார்க்கமும் உருவாக்கப்பட்டது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிநிலைகளை வகுத்து அதில் ஒவ்வொன்றிலும் நான்காகப் பிரிய மொத்தம் 16 படிநிலைகளை வகுத்தனர். இதன் பிரயோஜனம் கடவுளின் பூரண இன்பத்தைப் பெறுவதேயாகும். ஆனால் இதற்கு நமக்கு கொடுக்கப்பட்ட ஆயுட்காலம் போதாது.*

*எனவேதான், நம் பெருமானார் மனிதப் பிறப்பெடுத்த நாம் அனைவரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டாக ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வகுத்தார். அதில் அவர் கடவுள் வழிபாட்டிற்கு கொடுத்துள்ள வரையரையைக் காண்போம்.*

*“ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் - காருண்யம் உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டு பூரணமாக விளங்கும். அத்திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். அவ்வனுபவம் பூரணமாதலே கடவுள் வழிபாடு” என்று அருளியுள்ளார்.*

*இதனின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது என்னவென்றால் கடவுள் வழிபாடு என்பது கடவுள் இன்பத்தை நாம் பெறுவதற்கே என்பதாம்.*

*மேலும், பசி தவிர்த்தலும், கொலை தவிர்த்தலுமாகிய பர ஜீவகாருண்யத்தின் பலனைப் பற்றி தெரிவிக்கும்போது “இவ்வுலக இன்பங்களையும், அளவிறந்த சித்தி இன்பங்களையும், எக்காலத்தும் அழியாத முத்தி இன்பத்தையும் அருளால் அடையப்படும்” என்று அருளியுள்ளார்.*

*இதன்றி, “ஜீவகாருண்யம் என்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலை காலமுள்ளபோதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல் எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து,*

அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்" என்று அருளியுள்ளார்கள்.

அன்றியும், "ஜீவகாருண்ய ஒழுக்கத்தை உடையவர்களாகிய அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அனுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம், சர்வ சக்தியையுடைய கடவுளருளுக்கு முழுதும் பாத்திரமாவார்கள்" என்றும் அருளியுள்ளார்கள்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம்** என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க ஜீவதேகங்களே கடவுள் விளங்கும் உண்மை ஆலயங்கள். எறும்பு முதல் யானை ஈறாக உள்ள ஜீவாத்மாவே சபையாகவும், அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு வழிபடும் நிலை நம்முள் வருமேயானால் அதுவே மகேஸ்வர பூஜை.

மேலும், "கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க சிலா, விக்கிரக, பூத, தாரு முதலியவைகளில் வெளிப்படுத்திக்கொள்வது மந்த நியாயம். அதில் தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்லுவது ஜாலம். காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதி சீக்கிரம் பற்றுதல்போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால் சுத்தமாதி மூன்று தேகசித்தியும் அத்தருணமே வரும். பக்குவம் இல்லாதவர்களுக்கு அருள் செய்தாலும், வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்குமுன் அபக்குவர்கள் (பக்குவமில்லாதவர்கள்) செயற்கையாகிய ராகத்துவேஷாதி அசுத்தங்களை (விறுப்பு வெறுப்புக்களை) போக்கிக் கொள்வது உத்தமம்" என்றும் நம் பெருமானார் அருளியுள்ளதை நினைவில் கொள்க.

எனவே, பிரபஞ்ச போகத்தை விரும்பும் போகமாந்தராக இருப்பினும் அல்லது கடவுளது அருளை மட்டுமே நாடும் யோகமாந்தர்களாக இருப்பினும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை அனுஷ்டிப்பார்களானால் இவ்விருவரும் கடவுள் அருளைப் பெற்று பூரண சுகத்தை அடைவர் என்பது திண்ணம்.

**கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்**

**ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும், ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும், இவ்விளக்கத்தையும், இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தியடைந்த சாத்தியர்களே ஜீவன் முத்தரென்றும், அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயம் ஆவார்கள் என்றும் சத்தியமாக அறியவேண்டும். – வள்ளலார்**

# திருமந்திரத் தேன்

**ஓடிச்சென்று அங்கே ஒருபொருள் கண்டவர்**
**நாடியின் உள்ளாக நாதம் எழுப்புவர்;**
**தேடிச்சென்று அங்கே தேனை முகந்து உண்டு**
**பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே. - சுழுமுனையில் நாட்டம்**

*தலையுச்சிக்கு உயிருணர்வைச் செலுத்தி, அங்கே இறையனுபவம் பெற்ற யோகியர் சுழுமுனையில் நாதம் எழுப்புவர். சுவானந்தம் அனுபவிப்பர். மனத்தில் நீங்காது நின்ற பகையாகிய தமோ, ரஜோ குணங்களை நாதம் அடக்கும். திருவருள் துணையால் அகத்தவப்பயிற்சியால் தலையுச்சிக்கு உயிருணர்வைச் செலுத்தி, ஓடிச்சென்று ஒப்பில்லா ஒரு பெரும்பொருளைக் காணுதல் வேண்டும். அங்ஙனம் கண்டவர் சுழுமுனையில் நாதம் எழுப்புவர். அவர் நெற்றிப்புருவ நடுவில் காணப்படும் தேனமிழ்தினைத் தேடிச் சென்று முகந்து உண்பர். பாழயாகிய உடம்பகத்து அறுபகையும், செறுபுலன் ஐந்தும் நீங்காது நின்றுகொண்டு பெருந்துன்பத்தினை ஓவாது புசிக்கின்றன. அவற்றை ஆண்டவரிடம் செலுத்தும் உள்ளார்ந்த அன்பினால் வெல்லுதல் வேண்டும். அவ்வின்பினர் அப்பகைவரை வென்றடக்குவர்.*

*நாடியின் - நடுநாடியின் வாயிலாக. தேன் - நெற்றிபுருவ மதியமிழ்து. பாடி - பகைவர் தங்குமிடம் (உடம்பு). பகைவர் - அறுபகையும் ஐம்புலனும். கட்டும் - அடக்கும்*

*(அ சி) ஒரு பொருள் - குண்டலினி.*

*பகைவர் - ஐந்து இந்திரியங்கள்.*

**சன்மார்க்கம் தானே சகமார்க்கம் ஆனது,**
**மன்மார்க்கம் ஆம், முத்தி சித்திக்கும் வைப்பு -அது ஆம்**
**பின் மார்க்கம் ஆனது, பேராப் பிறந்துஇறந்து**
**உன் மார்க்கம், ஞானத்து உறுதியும் ஆமே. - ஞானத்திற்கு ஏணி**

*சன்மார்க்கத்தை எய்தும் படிநிலையே சகமார்க்கம். ஆதலின் அதில் சன்மார்க்கத்தின் இயல்பு உண்டு. அது நிலையான வழி. முத்தி, சித்திகளைப் பெறுதற்கும் ஏதுவாம். வேறு நெறிகள் எல்லாம் இடையறாமல் பிறந்தும் இறந்தும் உலகியலைச் சார்வனவாம். அவை ஞானமாகிய உறுதிப் பொருளைத் தருமோ? என்றால் தராது.*

*திருச்சிற்றம்பலம்*

## பாடலும் பொருளும்

**பாயிரமா மறைஅனந்தம் அனந்தம் இன்னும்**
**பார்த்தளந்து காண்டும்எனப் பல்கால் மேவி**
**ஆயிரமாயிர முகங்களாலும் பன்னாள்**
**அளந்தளந்து ஓர்அணுத்துணையும் அளவு காணா**
**தேயிரங்கி அழுது சிவசிவஎன்று ஏங்கித்**
**திரும்பஅருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற**
**தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல்வாரை**
**தண்ணருளால் வளர்த்து என்றுந் தாங்குந் தேவே. – மகாதேவமாலை (61)**

*பக்தி காண்டம், கர்ம காண்டம், ஞான காண்டம் என்றெல்லாம் பல வகையாக இறைவனைப் பற்றி எல்லா வேதங்களும் விளக்கங்கள் எழுதின. ஆரம்ப காலத்தில் மட்டுமின்றி இன்றுவரை எந்த வேதங்களாலும் இறைவனைப் பற்றிய முழுமையை உணர முடியவில்லை. உணர்த்தவும் முடியவில்லை. இறைவனைத் தேடுகின்ற பாக்களாக மட்டுமே அவை நிற்கின்றன.*

*இந்த நிலையிலும் எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என விரும்பிப் பலப்பல முறை பலப்பல ஆயரக்கணக்கான வழிகளாலும் தேடியும் ஓர் அணுத்துணை அளவும் காண முடியவில்லையாம்.*

*இதுவரை வெளிவந்த இறைவனைப் பற்றிய விளக்கங்கள் எல்லாம் வெறும் வாய்ப்பந்தலே தவிர உண்மை அல்ல என்றும், இறைவனைப் பற்றிய உண்மை சொல்லவல்லார் இந்தப் பூமியிலும் விண்ணிடத்தும் வேறெங்கும் இல்லவே இல்லை என்று "ஏய்ப்பந்தி வண்ணரென்றும் படிக வண்ணர் என்றும்" எனத் தொடங்கும் திருஅருட்பாவிலே தெளிவாக நம் பெருமானார் எடுத்துரைக்கின்றார்.*

*கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது பெரியோர் வாக்கு. வேதங்களை ஓதுவதால் மட்டுமே இறைவனைக் கண்டு விட முடியாது.*

**ஓதி நின்று உணர்ந்துஉணர்ந்து உணர்தற்கரிதாம் ஆதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி** *என்கிறது அகவல். எவ்வளவு தான் ஓதினாலும் அவனை உணரவே முடியாதாம். அவ்வாறு எந்த வேதத்திற்கும் எந்த வழிக்கும் எட்டாது விளங்குகின்றார்.*

*எவ்வளவோ முயற்சி செய்தும், எவ்வளவோ ஓதியும் காண முடியவில்லையே என்று வருத்தமுற்று இறைவனைக் காண வேண்டுமென்று ஏக்கமுற்று அழுது சிவசிவ என்று வாயார வாழ்த்த அருள்நிறைந்த பெருவெளியில் வாழ்கின்ற சிவம் கிட்டும்.*

**நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதமே நன்னிதியே ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று வனைந்து வனைந்து ஏத்துதும் நாம்** என்று திருஅருட்பாவிலே நம் பெருமானார் அருளியுள்ளார்.

இறைவனைக் காண வேண்டும் என்ற ஏக்கம் இருந்தால் **அழுத கண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?** என்று வினவுகின்றார். வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம் என்று எடுத்துக் காட்டுகின்றார்.

அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி. அழுத பிள்ளைக்கு மட்டுமா அன்னை பால் கொடுப்பாள். அழுவதற்கே பலம் இல்லாத குழந்தைக்கும் கொடுப்பாள். அதுதான் அவளுடைய கருணை, தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வமல்லவா.

ஈன்ற தாயானவள் எப்படி இரக்கத்துடன் ஆதரவுடன் தான் பெற்ற சேயை வளர்ப்பாளோ அது போல் எம்போன்ற அடியவரைத் தன்னுடைய குளிர்ந்த அன்பான அருளால் வளர்ப்பது மட்டுமின்றி என்றும் அனைத்துத் தாங்குகின்ற இறைவனே என்கிறார்.

இறைவனை வணங்குகின்ற அனைவரும் வளர்வது உண்மை. அந்த வளர்ச்சிக்கு இறைவனின் பரிவான அருளே காரணம் என்பதும் அதனை அடியவர்கள் நன்கு அறிவர் என்பதும் உண்மை. இறையருளை அடியவர்கள் அறிந்து மகிழ்வர். இறைவன் நம்மைத் தாய்போல் தாங்கி வளர்ப்பதும் உண்மை.

திருச்சிற்றம்பலம்




## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# சன்மார்க்கப் பெரும்பதி வருகை (12-4-1871)

– திருஅருட்பா உரைநடைப் பகுதி

*சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும் அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசாரபேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம்.*

*இப்போது வருகிற நமது கடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லா கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி.*

*இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள். அஞ்சவேண்டாம்.*

*பிரஜோற்பத்தி சித்திரை 1* *சிதம்பரம் இராலிங்கம்.*

**தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்**
**தெய்வங்களெல்லாம் தெரிசிக்கும் பாதம்**
**வாரா வரவாகி வந்த பொற்பாதம்**
**வஞ்ச மனத்தில் வசியாத பாதம் – திருஅருட்பா**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:** **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048** **IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் பூரண சித்தி யோகம்

ஒரு நாள் தியான முகாம்...

**தன்னையறிந்து இன்பமுறு...**



- மன அழுத்தம், வேதனை, மனக்கவலை நீங்க
- நோய்களில் இருந்து விடுபட
- வாழ்க்கையில் பேரின்பம் அடைய

**ஜீவகாருண்யம், பக்தி, தியானம், சத்சங்கம்...**

இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

**நாள்:** ஜீலை 23 ஞாயிறு (ஒருநாள் முழுவதும்)

**நேரம்:** காலை 6:30 மணி முதல் இரவு 7:00 மணி வரை

**இடம்:** பிளாட்டினம் மஹால்
165, பவானி மெயின்ரோடு, R N புதூர் (Po),
ஈரோடு – 638005.

**முன்பதிவிற்கு:** 94434 89849, 75020 26565

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! அன்பெனும் குடில்புகும் அரசே!

திருவண்ணாமலையில்

# ஆன்மீக சத்சங்க விழா

உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே. - அகவல்

**நாள்:** 16-07-2017, ஞாயிற்றுக் கிழமை

**இடம்:** ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருமண மண்டபம்,
செட்டி தெரு, திருவண்ணாமலை.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 88835 90659, 98652 29035

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly June 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

நாள்: 30-07-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: **அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.



- **அகவல் பாராயணம்** - சன்மார்க்க அன்பர்கள்
- **சிறப்பு சத்சங்கம்** - சன்மார்க்க சாதுக்கள்
- **ஜோதி தியானம்**
- **திருவருட்பா இசைக் கச்சேரி**
- **ஜோதி வழிபாடு**

*போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது*
**அனைவரும் அருள் பெற வருக! வருக!!**

தொடர்புக்கு: **97509 29074, 99651 50531**

பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**